**<u>முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அரியலூர்</u>**
**முன்னிலை.திரு.ஆர்.காாத்திகேயன், பி.ஏ.,பி.எல்.,**
**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி, அரியலூர்.**
**2018ஆம் ஆண்டு ஆக்ஸ்ட் திங்கள்28ஆம் நாள் செவ்வாய்கிழமை**
**<u>Succ.op.1/2017</u>**

1. அம்மாகண்ணு
2. மணி ....மனுதாரர்கள்

/எதிர்/

1. போஸ்ட் மாஸ்டர்
   தலைமை தபால்நிலையம்,
   அரியலூர்.

2. போஸ்ட் மாஸ்டர்
   கிராம தபால்நிலையம்,
   தவுதாய்குளம், அரியலூர் வட்டம்.

3. குமார் ....எதிர்மனுதாரர்கள்

இம்மனுவானது என் முன்னிலையில் இறுதியாக 20.08.2018ஆம் தேதியன்று விசாரணைக்கு வந்ததில் மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.எஸ்.சங்கர் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜராகததால், மனு, சாட்சி, மற்றும் <u>சான்</u>றாவணங்கள் ஆகியவற்றைப் பரிசீலித்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.

**<u>உத்தரவு</u>**

இறந்துபோன மாணிக்கம் என்பவருக்கு மனுதாரர்கள் தான் வாரிசு என இந்திய வழி உரிமைச் சட்டம் 1925 பிரிவு 372 மற்றும் சிபிசி ஆர்டர் 7 ரூல் 1 ன்படி படி மனுதாரர்களால் இந்த மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>1.மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கம்</u>**

2-ம் மனுதாரின் அப்பா மாணிக்கம். மேற்படி 2-ம் மனுதாரின் அப்பா மாணிக்கம் சென்ற 06.04.2017 ல் சாலை விபத்தில் இறந்து விட்டார். இறந்த

மாணிக்கதிற்கு 2-ம் மனுதாரர் மட்டும் நேரடி வாரிசு. மேற்படி இறந்த மாணிக்கத்தின் வாரிசு சான்றிதழ் கேட்டு இந்த 2-ம் மனுதாரர் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார். ஆனால் இறந்துபோன மாணிக்கத்திற்கு 2-ம் மனுதாரர் மட்டும் இந்து வழி உரிமைச் சட்டத்தின்படி வாரிசு ஆவார். இறந்து போன மாணிக்கம் அரியலூர் தபால் நிலையத்தில் சேமிப்பு கணக்கு செலுத்தி வந்துள்ளார். அவரது கணக்கில் ரூ.42,326/- இருப்பு உள்ளது. மேற்படி இருப்பு தொகை பெற 3-ம் எதிர்மனுதாரர் ஆட்சேபனை செய்ததால் இந்த மனுதாரர் இந்து வழி வாரிசு உரிமை கோரும் மனுவை தாக்கல் செய்துள்ளார். ஆகவே சமூகம் நீதிபதி அவர்கள் மனுதாரர்களின் மனுவினை ஏற்றுக் கொண்டு அஞ்சலக சேமிப்புத் தொகையையும் பெற்றுக் கொள்ள ஏதுவாக இந்த 2-ம் மனுதாரருக்கு வாரிசு உரிமை சான்று வழங்குமாறு 2-ம் மனுதாரால் வேண்டப்படுகிறது.

2.மனுவில் கோரியுள்ள பரிகாரம் 2-ம் மனுதாரருக்கு கிடைக்கக்கூடியதா? என்பதே தீர்வுக்குரிய பிரச்சனையாகும்.

3. இரண்டாம் மனுதாரரின் அப்பா மாணிக்கம் என்றும், மேற்படி 2-ம் மனுதாரரின் அப்பா மாணிக்கம் சென்ற 06.04.2017 தேதியில் சாலை விபத்தில் இறந்து விட்டதாகவும், இறந்த மாணிக்கத்திற்கு 2-ம் மனுதாரர் மட்டும் நேரடி வாரிசுதாரர் என்றும், மேற்படி இறந்த மாணிக்கத்தின் வாரிசு சான்றிதழ் கேட்டு இந்த 2-ம் மனுதாரர் மனுதாக்கல் செய்துள்ளார் என்றும், இறந்துபோன மாணிக்கத்திற்கு 2-ம் மனுதாரர் மட்டும் இந்து வழி உரிமைச் சட்டத்தின்படி வாரிசு ஆவார்கள் என்றும், இறந்து போன மாணிக்கம் அரியலூர் தபால் நிலையத்தில் சேமிப்பு கணக்கு செலுத்தி வந்துள்ளார் என்றும், அவரது கணக்கில் உள்ள இருப்புத் தொகை ரூ.42,326/-ஐ யும் பெற இந்த 2-ம் மனுதாரர் இந்து வழி வாரிசு உரிமை சான்றிதழ் வழங்கக் கோரி இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார்கள்.

4.மனுதாரர்கள் தரப்பில் 1ம் மனுதாரர் ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். மனுதாரரின் ஆதார் கார்டு ஒப்பிட்டு நகல் ம.சா.ஆ-1 ஆகவும், அம்மாகண்ணு

ஆதார்கார்டு (ஒப்பிட்டு நகல்) ம.சா.ஆ.2 ஆகவும், அரியலூர் தபால் நிலைய சேமிப்பு கணக்கு புக் நகல் ம.சா.ஆ.3 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர்கள் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

5.இவ்வழக்கில் 3-ம் எதிர்மனுதாரர் இறந்துபோன மாணிக்கத்தின் சகோதரர் மகன் ஆவார். இந்த 3-ம் எதிர்மனுதாரர், மாணிக்கத்தின் சேமிப்பு தொகையை அவரது வாரிசான 2-ம் மனுதாரர் பெற ஆட்சேபனை செய்ததால் மனுதாரர் வாரிசு சான்றிதழ் பெற அறிவுறுத்தியதன் அடிப்படையில் இந்த மனுவை 2-ம் எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ளார். இறந்து போன மாணிக்கம் அரியலூர் தபால் நிலையத்தில் அவரது சேமிப்பு கணக்கில் ரூ.42,326/- இருப்பு உள்ளது என்பது ம.சா.ஆ.3 ஆவணத்தின் மூலம் தெரியவருகிறது. இந்த சூழ்நிலையில் 2-ம் மனுதாரர் இறந்துபோன மாணிக்கம் என்பவருக்கு வாரிசாக அறிவித்து வாரிசு சான்றிதழ் வழங்க வேண்டுமென இந்நீதிமன்றம் முடிவு செய்து உத்தரவிடுகின்றது.

**<u>முடிவில்</u>**

1) இறந்துபோன மாணிக்கம் என்பவருக்கு மனுதாரர்கள் அம்மாகண்ணு மற்றும் மணி ஆகிய இருவரும் வாரிசுதாரர்கள் என அறிவித்து வாரிசு சான்று வழங்க உத்தரவிடப்படுகிறது.

2) மேற்படி வாரிசு சான்றிதழின் மூலம் மனுதாரர்கள் இறந்துபோன மாணிக்கம் பெயரில் அரியலூர் தபால் நிலையத்தில் உள்ள சேமிப்பு கணக்கில் உள்ள இருப்புத்தொகை ரூ.42,326/-ஐபெற்றுக்கொள்ள அனுமதிக்கப்படுகிறார்கள்.

இந்த மனு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, இன்று 2018ஆம்

ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 28ஆம் நாளன்று திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறியப்பகரப்பட்டது.

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**அரியலூர்.**

**<u>மனுதாரர்கள் தரப்பில் சாட்சி</u>**

ம.த.சா.1 - அம்மாக்கண்ணு

**<u>மனுதாராகள் தரப்பு சான்றாவணங்கள்</u>**

ம.சா.ஆ. 1 - மணி ஆதார்கார்டு ( ஒப்பிட்டு நகல்)

ம..சா.ஆ. 2 - அம்மாகண்ணு ஆதார்கார்டு (ஒப்பிட்டு நகல்)

ம.சா.ஆ. 3 - அஞ்சலக சேமிப்பு பாஸ்புத்தகம் (ஜெராக்ஸ் நகல்)

**<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u>** இல்லை

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
அரியலூர்.